بسم الله الرحمن الرحيم

# *Friday Sermon 10/07/2015*

**(23 RAMADAN 1436 HIJRI)**

## *திரு குர் ஆனும் கண்ணியமிக்க இரவும்*

## THE QURAN & THE NIGHT OF DECREE

### HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

உலக மக்கள் அனைவருக்கும் சமாதான வாழ்த்துக்கள் கூறிய பின் தஷஹீதும் தஅவுசும் அல்-பாத்திஹாவும் ஓதிக் கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள்இவ்வாறு கூறினார்.

**“ரமலான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும் தெளிவான சான்றுகளைக் கொண்டதாகவும் நன்மை தீமைகளைப் பிரித்தறிவிப்பதுமான அல் குர் ஆன் இறக்கியருளப் பெற்றது. ஆகவே உங்களில் எவர் அம்மாதத்தை அடைகின்றாரோ அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும்”.** (2-186)

தூய தூதர் முஹமது (ஸல்) வுக்கு, எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பரிபூரண வசனமாக இறக்கப்பட்ட ஒரு மாபெரும் அற்புதமாகும் திரு குர் ஆன். நாம் எங்கிருந்து வந்தோம் எங்கு செல்லுகிறோம் என்று மட்டுமல்லாமல் முடிவில்லாத பாக்கியம் நிறைந்த பாதை வழியாக பயணம் புரிந்து, இறுதியில் சொர்க்கத்தின் பால் சென்றடைகின்ற பாதைகளைக் குறித்தும் அத்தோடு நரகத்தைப் பற்றிய ஏச்சரிக்கை விடுத்தும் நரகத்தின் பால் செல்லுகின்ற பாதைகளை சுட்டி காட்டியும் அந்த புனித நூல் மிக விளக்கமாக வழிக்காட்டுகின்றது. எழுத்தறிவின் பாதையினைத் திறந்து, பகுத்தறிவின் வழியாக, வெளிப்படையும் உள்ப்படையுமான ஆன்மீக சிகிச்சை விதிகள் விடுத்து முன்னேற்றம் மேற் கொள்ளுகின்ற திரு குர் ஆன், உலகத்திற்காக தேற்றுவித்ததேயாகும். ஆனால் மிக வேதனை விளைவிக்கும் ஒரு உண்மை என்னவென்றால், நாம் அந்த புனித நூலை பாதுகாக்கின்றோம் என்றிருந்தும் நாம் அதன் பொருளையும் கட்டளைகளையும் இழந்திருக்கின்றோம். காரணம் அதைப் புரிந்து கொள்ளும் விஷயத்தில் நிகழ்ந்த குறைவே தான்.

அல்லாஹ்வின் நூலின் பால் திரும்பிக் கொள்ளாத காலம் வரையில் இந்த உம்மத்திற்கு எவ்வித இரட்சிப்பும் நிகழ்வதில்லை. நிச்சயமாக திரு குர் ஆன் மனித குலத்தின் வழிகாட்டியே ஆகும். ஆனால் அதை படிக்கின்ற எல்லோருக்கும் மார்க்கத்தரிசனம் கிடைப்பதில்லை. நேர்

வழி, சில குறிப்பான நபர்களுக்காக மாற்றி வைக்கப்பட்டதேயாகும். அவர்கள் முத்தகீங்கள் ஆவார்கள். அதவாது அவர்கள் இறைவனை அஞ்சிக்கொள்ளுகின்றோர்களும், தீமையிலிருந்து சுயமாகவே தன்னை பாது காத்துக் கொள்ளுகின்றோர்களும், முழுமையாகவும் நேர் வழியின் ஒளி நிறைந்த பாதை வழியாக தூய உள்ளத்தோடு பயணம் மேற் கொள்ள விரும்புகின்றோர்களும் ஆவார்கள். திரு குர் ஆனின் பொருள் உலகெங்குமுள்ள மக்களை உணரச் செய்கின்றது என்று மட்டுமல்லாமல் அதன் ஒவ்வொரு வார்த்தைகளிலும் ஒரு காந்த சக்தியுள்ளது. அது மக்களை ஈர்த்துக் கொள்கின்றது. அரபி மொழியில் ஒரு வார்த்தைக் கூட அவர்களுக்குத் தெரியாமல் இருந்தாலும்! திருக் குர் ஆன் இறக்கப்பட்டிருப்பது, மனுகுலத்தின் உத்தமனான நமது பிரிய தூதர் முஹமது (ஸல்) வின் தாய் மொழியில் ஆகும். கடந்த 14-நூற்றாண்டுகளாக மொழிகளின் அன்னையாக திகழுகின்ற மொழியே ஆகும் அரபி. அவ்வகையிலான ஒரு மேன்மை மற்றெந்த மொழிகளுக்கும் உரிமை கோரயியலாது. நதிகள் தடம் மாறிப் போகலாம். ஆட்சிகள் உயரலாம் தாழலாம். மக்களோடு மொழிகளும் மாய்ந்துப் போகலாம். புதிய மொழிகள் உருவாகலாம். ஆனால் திரு குர் ஆனுக்கு மட்டும் எவ்வித மாற்றமும் எற்படுவதில்லை. இந்த பாதுகாப்பின் இரகசியம் திரு குர் ஆனில் இருக்கும் இறை வாக்குறுதியே ஆகும். இந்த அற்புதமான பாது காவல் அல்லாஹ் நடத்தி செல்லுவது, திரு குர் மீது கடந்த கால மக்கள் வைத்துக் கொண்ட பக்தியும் பாசமும் மூலமாகத் தான். ஆனால் முற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்தது, அல்லாஹ் அதன் பாது காவலை முழுமைப்படுத்திக் கொள்வது, ஒவ்வொரு காலமும் அவன் தேர்ந்தெடுக்கின்ற இறைத் தூதர்கள் மூலமாகவும் இஸ்லா மத சீர்த்திருத்தாளர்கள் மூலமாகவும் ஆகும். அவர்கள் திரு குர் ஆனின் தூய்மையை உயர்த்திக் கொள்ளவும். ஏனையவர்களுக்கு அதை விளக்கிக் கொடுக்கவும் செய்கின்றனர். எப்போதெல்லாம் முஸ்லீம்கள் அதை தவறாக விளக்குகின்றார்களோ அப்போதெல்லாம் அல்லாஹ் அவன் தேர்ந்தெடுக்கின்றவர்களை அனுப்பி அவனின் கட்டளைகளை சரியான நிலையில் விளக்குவதற்காக நியமிக்கின்றான். அக்காரணத்தால் அதன் உண்மையான பொருள்களிலிருந்து மக்கள் தடம் மாறி செல்லாமல் பாதுகாக்கப்படுகின்றார்கள். அல்லாஹ்வின் தூதர்களுடைய அதாவது இஸ்லாமிக சீரமைப்பாளர்களின் முயற்சிகள் இல்லாமல் இருந்தால், இருந்தும் மிக ஏராளமான மக்கள் இந்த இறை மனிதர்களின் விளக்கங்களை மறந்து விடவும், அவர்களின் மன விருப்பத்திற்கு ஏற்றவார் குர் ஆனைப் படித்துக் கொள்ளவும் புரிந்துக் கொள்ளவும் செய்கின்றார்கள்.

நமது அன்பிற்குரிய தூதரும் எஜமானனுமான ஹஸ்ரத் முஹமது (ஸல்) முலமாக திரு குர் ஆனை தேற்றுவித்த மாதமாகும் ரமலான் மாதம். அந்த புனித மாதத்தில் ஆகும் திரு குர் ஆன் நமக்கு தந்தருளப்பட்டிருப்பது இந்த மாதமும், இம்மாதத்தில் குறிப்பான சில நாள்களும், கண்ணியமிக்க இரவும், முஸ்லீம் உம்மத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பதில் சந்தேகமில்லை. அந்த நாளின் இரவில் வெளிப் பாடுகள் வழங்கும் மலக்குகளின் நாயகன் ஜிப்ரீல் (அ), அல்லாஹ் தேர்ந்தெடுத்த தனது தூதரின் அருகாய்மையில் வந்து இறைச்

செய்தியைப் பகிர்ந்து கொடுத்தது மட்டுமன்றி பரிபூரணமான மதவும் இறுதி வாழ்க்கைச் சட்டங்களும் மனித குலத்திற்கு வழங்குவதற்கான நேரம் எட்டி விட்டது என வெளிப்பாடுகள் மூலமாக தெரியப்படுத்திக் கொள்ளவும் செய்தது. ஆகவே முழு மனித குலத்திற்கும் அல்லாஹ்வின் அருளாக திரு குர் ஆன் நிலைக் கொள்ளுகின்றது. அது மனிதனை ஆற்றல் மிக்கவனாக பரிணமிக்கச் செய்யும் வகையில் அமைந்துள்ளது. அதன் தோற்றம் குறிப்பாக, அறிவாளிகளாகிய நபர்களுக்கு, அவர்களின் ஆழமான வாசித்தல் வழியாகவும், சிந்தனைகள் மூலமாகவும் அதன் உண்மையான பொருள்களை உணர்ந்துக் கொண்டு அனுதின வாழ்க்கையை அதற்கேற்ப செயல் முறைப்படுத்திடவும் முடிகின்றது.

திரு குர் ஆன் ஒரு சதாரணமான நூலல்லை. கதைப் புத்தகங்களோ விஞ்ஞான நூல்களோ எடுத்து ஒன்று படித்து புரிந்துக் கொள்வதைப் போன்று சிறிய வாசித்தல் மூலமாக அதை சரியான நிலையில் புரிந்துக் கொள்ள முடியாது. குர் ஆனின் அடிவேர் அல்லாஹ்வுடன் நேரடியாக இணைந்திருகின்றது. அவை அல்லாஹ்வின் பரிபூரணமான வார்த்தையாகும். உயிரின் உண்மையான ஊற்று. தாகம் கொள்ளுகின்ற ஒவ்வொரு இதயங்களும் அல்லாஹ்வின் அதிகாரத்தை நிலை நாட்டிட விரும்புகின்றது. குர் ஆன் வழியாக அல்லாஹ் மனிதப் படைப்பினை மிக புகழ்ந்து கூறியுள்ளான். மனிதன் மலக்குகளை விட உன்னதமான பதவியிலாகும். காரணம் மலக்குகளுக்கு சாத்தானிக சக்திகளை கீழ்ப்படுத்துவதற்கான ஆற்றல் வழங்கவில்லை. ஆனால் மனிதன் ஒரு தடவை அபாயத்தில் வீழ்ந்துக் கொண்டால், ஒரு புது நாளில், ஒரு புது காலை அவனுக்காக காத்திருக்கின்றது. இரவின் இருளிலிருந்து அல்லாஹ்வின் மார்க்க தரிசனம் என்னும் சூரியன் அவனுடைய எல்லா இருள்களையும் நீக்கிக் கொள்ள போதுமானதாகும். அவ்வகையான ஒரு அறிவாளி உண்மையில் பாக்கியமுடையவன் ஆவான். காரணம் அவன் அல்லது அவள் அல்லாஹ்வின் விருப்பத்திற்கே தன்னை அர்ப்பணித்துக் கொள்கின்றனர்.

அவ்வாறே ஒரு நம்பிகையாளருக்கு மிக அதிகமான நிலையில் அல்லாஹ்வின் அருகாய்மையை அடைய ரமலாம் மாதம் வழிவகுக்கின்றது. ஒரு பூந்தோப்புக் காரன் அல்லது ஒரு விவசாயி, நல்ல முறையிலான அறுவடைக்கு பின் அவனது உள்ளம் மகிழ்ச்சியடைவது போன்றே ரமலான் மாதத்தில் நம்பிக்கையாளர்கள் அவனது திருப்தி என்னும் அறுவடை நடத்திக் கொள்ளுகின்றான். மட்டுமன்றி ஒரு விவசாயி அடைந்து விடும் ஆனந்தத்தை விட மேலாக நம்பிக்கையாளர்கள் சந்தோஷத்தை அடைகின்றார்கள்.

நமது உயிர் நிலைநிற்கும்காலம் வரையில் நாம் திரு குர் ஆனின் கட்டளைகளை ஆதரித்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வை அடைவதற்கும் அவனது திருப்தியைப் பெற்றுக் கொள்ளுவதற்குமான எல்லா மார்க்க வேண்டு கோள்களும் அதில் உள்ளன. ஆனால் **ஒரு பல்கலைக்கழக ஆசிரியரின் உதவியின்றி அப்பல்கலைகழகத்தில் கல்வி பயிலுகின்ற மாணவனுக்கு அவனது புத்தக தாள்களின் சரியான பொருளைப் புரிந்துக் கொள்ளயியலாமல்**

இருப்பதைப் போன்றே அல்லாஹ்விடமிருந்துள்ள ஆள்கள் தோன்றிக் கொள்ளாமல் அல்லாஹ்வின் நேர் வழியைப் பெற்றுக் கொள்ள மனிதனுக்கு முடியாது. ஆகவே எல்லா கால கட்டங்களிலும் அல்லாஹ் விடமிருந்து ஆள்கள் தோன்றி கொண்டேயிருக்க வேண்டும். அவர்கள் அந்த ஆன்மீக பல்கலைகழகத்தில் லச்சர்களாக தொண்டற்றுவார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளை சரியான நிலையில் நடைமுறைப்படுத்தியும் அல்லாஹ்விடம் எவ்வாறு தொடர்பை எற்படுத்திக் கொள்ளலாம் என விழிப்புணர்வு வழங்கியும், அத்தோடு மதத்தைப் பற்றியும் வாழ்க்கையைக் குறித்தும் அவர்கள் மக்களை கற்பிக்கவும் செய்வார்கள். அது அவசியமானதாகும். நிச்சயமாக அல்லாஹ் நம்மிடம் மிக கருணையுடன் பருமாறிக் கொள்கின்றான். அதைப் போன்றே நாம் பலவீனமானவர்கள் என்றும் சாத்தானுடையவும் சாத்தானின் படையுடையவும் பிடியில் நாம் அகப்பட்டு விடுவோம் என்றும் அல்லாஹ் நன்கு அறிவான். ஆனால் அல்லாஹ் எல்லா கால கட்டங்களிலும் அருள் மிக்க நூற்றாண்டுகளை நமக்கு தந்தருளுகின்றான். அது லைலத்தூல் கதரின் ஒரு தொடர் ஆகும். அத்தொடரில் நம்பிக்கையாளர்களின் அதாவது உண்மையினைத் தோடுகின்றோர்களின் வாழ்க்கை அல்லாஹ்வின் தூதனுமாக இணைந்திருப்பதும், அந்த இறை பிராகஷத்திலிருந்து அவர்கள் சுயமாகவே ஒளியினைப் பெற்றுக் கொள்ளவும் செய்வார்கள். இந்த அருள் நிறைந்த காலக் கட்டத்தில் **“ரூஹில்குதூசி”**ன் தோற்றம் மிக புண்ணியமானதாகும். அது வழியாக நம்பிக்கையாளர்களும் உண்மையினைத் தேடுவோர்களும் அல்லாஹ்விடம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். அதற்கு வழி வகுப்பதாகட்டும், அல்லாஹ்வின் தூதரின் பிரார்தனைகளும் அன்னாருமாக அவர்கள் வைத்து கொள்ளும் பந்தவுமாகும்

இன்று அதாவது நாம் கடந்து சென்று கொண்டிருக்கின்ற இக்காலம் சக்தி வாய்ந்த லைலத்துல் கத்திரின் காலமாகும். உலகெங்கும் இருள் மூழ்கிவிட்டது. நல்லொழுக்க செயல்களிலிருந்து மனிதன் தடம் மாறி சென்று விட்டான். ஆகவே அல்லாஹ்வின் புனித நூலின் பாலும் அனைத்து நபி மார்களுடையவும் சீர்திருத்தாளர்களுடையவும் போதனைகளின் பாலும் மனிதன் திரும்பிக் கொள்ள வேண்டியதாகும். இந்த பயரங்கமான இருளில், அல்லாஹ் அவனின் உண்மை ஒளியினை வெளிப்படுத்தியிருக்கின்றான். அருள் நிறைந்தவனாக மாறிட விரும்புகின்றவர்களுக்கு அந்த இருளிலிருந்து பிராகஷத்தின் பால் திரும்பிக் கொள்ள வாய்ப்புள்ளது. இறை அடையாளத்தின் ஒரு நவீனமான உதயம் வெளிப்பட்டிருக்கின்றது. இந்த பிராகஷத்தினுடையவும் அருள்களுடையவும் வட்டாரத்திற்குள் வாழ விரும்புகின்றோர்கள் முன் வரவும். இறைவனுக்காக வாழ்க்கையினை அர்ப்பணித்துக் கொள்ளவதன் உண்மைப் பொருளை உணருங்கள். நிச்சயமாக அவ்வகையான நபர்களுக்கு பயரங்கமான சோதனைகளை எதிர் கொள்ள வேண்டியதாக வரும். ஆனால் முடிவில் இந்த சோதனைகள்யாவும் ஒரு நெருப்பு போல் எழுந்து அவர்களின் உள் படையான இருள்களனைத்தையும் எரித்து விடுகின்றது. அதன் விளைவாக அவர்கள் இயல்பான நிலையிலும் நல்லொழுக்க நிலையிலும் ஆன்மீக நிலையிலும் தங்கள் மூலமாக இறை அனுபவங்கள் தென்படுவதை பகுத்தறிவார்கள். தங்களின் கால

**கட்டத்தை சார்ந்த இறை பிரதி நிதியிலிருந்தும் அவர்களுக்கு இவ்விஷயங்கள் யாவும் புரிந்துக் கொள்ளயியலும்.**

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த எனது எல்லா பிரியமான தோழர்களுக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக! இறை செய்தியின் மகத்துவத்தை அவர்கள் புரிந்து கொள்ளுகின்றார்கள். திரு குர் ஆன் அவர்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். அவ்வாறே அவர்கள் பயணம் மேற் கொள்ளுகின்ற ஒரு குர் ஆனாக மாறட்டும்! மனித குலத்தின் உத்தமனும் காத்த முன்னபியுமான ஹஸ்ரத் முஹமது (ஸல்) அவர்களின் மாதிரிகையை பின் பற்றுங்கள். குர் ஆனுடைய ஆட்கள் என்ற நிலையில் அவர்கள் ஒன்றாக சேரட்டும். நாம் நமது வாழ்க்கையின் ஒவ்வொரு தினமும் லைலத்துல்கதரின் அருள்களை அனுபவிக்கின்றவர்களாக மாறட்டும்! இன்ஷா அல்லாஹ். ஆமீன்


**Issued by:**

Jamaat Ul Sahih Al Islam

*Dawa Department*

Tamil Nadu (Regd. No. A/693)

**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**

**Azim Ahmad**

Sadr Sahib'ul Faraj

Kerala/Tamil Nadu

**E-Mail:** azimahmad070@gmail.com

**Cell:** 9947181650

9789180817